100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் - ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட, 8 ஒன்றியங்களில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டுவந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நாளை (24.12.2025) காலை நடத்திட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி திருச்சி தெற்கு மாவட்டத்தில் உள்ள 8 ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நாளை (24.12.2025 - புதன்கிழமை), காலை 10 மணியளவில், கீழ்க்கண்ட விவரப்படி ஒன்றிய பா.ஜ.க.அரசையும், அ.தி.மு.க. வையும் கண்டித்து கீழ்க்கண்ட இடங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

| ஒன்றியம் பெயர் | ஒன்றிய கழக செயலாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் ஏற்பாட்டாளர்கள் | தலைமை | கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| திருவெறும்பூர் தெற்கு | சி.கங்காதரன் | வண்ணை அரங்கநாதன் | குண்டூர் ஊராட்சி |
| திருவெறும்பூர் வடக்கு | கே.எஸ்.எம்.கருணாநிதி | கே.என்.சேகரன் | வாழவந்தான் கோட்டை ஊராட்சி |
| மணப்பாறை | சி.ராமசாமி | கவிஞர் சல்மா | பன்னாங்கொம்பு ஊராட்சி |
| மருங்காபுரி வடக்கு | சி.செல்வராஜ் | பி.எம்.சபியுல்லா | வேம்பனூர் ஊராட்சி |
| மருங்காபுரி தெற்கு | சி.சின்ன அடைக்கண் | இரா.மூக்கன் | செவல்பட்டி ஊராட்சி |
| மருங்காபுரி மத்தியம் | எம்.பழனியாண்டி | என்.கோவிந்தராஜ் | கவுண்டம்பட்டி ஊராட்சி |
| வையம்பட்டி வடக்கு | ஆர்.சீரங்கன் | அ.த.த.செங்குட்டுவன் | V.பெரியப்பட்டி பூலாம்பட்டி ஊராட்சி |
| வையம்பட்டி தெற்கு | வி.ஏ.ராஜேந்திரன் | இரா.குணசேகரன் | எலமணம் ஊராட்சி |

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, கிளை கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாகமுகவர்கள், கழகமுன்னோடிகள் அந்தந்த ஒன்றியங்களில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் அழைத்து பேசி முறையாக ஆர்ப்பாட்டம் பற்றி துண்டறிக்கையை அச்சிட்டு, நம்முடைய கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கு தந்து அனைவரையும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க உரிய ஏற்பாடுகளை செய்து வெற்றிகரமாக இக்கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி,**
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.


22-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 05-03-1944

மறைவு 23-12-2003

எவரெஸ்ட் **கோ.நடராசன்**

முன்னாள் திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. துணை செயலாளர்,
முன்னாள் தி.மு.க. நகர செயலாளர்,
முன்னாள் காமராஜ் கூட்டுறவு நகர வங்கி தலைவர்,
முன்னாள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர்,
மாவட்ட ஓட்டல் உரிமையாளர்கள் சங்க துணை தலைவர்

புன்னகையின் பூந்தோட்டமே ! அன்பின் பிறப்பிடமே !
மண்ணுலகிலிருந்து மறைந்தீர் நீர் !
என்றும் எங்கள் நெஞ்சில் நிறைந்தீர் நீர் ! !
உங்கள் ஆசியோடு என்றும் தாங்கள் காட்டிய
மாண்புமிகு முதல்வர் தளபதியார், மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின்
மாண்புமிகு அண்ணன் எ.வ.வேலு அவர்களின் வழி நடப்போம்

என்றும் உங்கள் நினைவுகளுடன்...

எவரெஸ்ட் ந.உமாசங்கர் D.M.E., எவரெஸ்ட் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்
எவரெஸ்ட் ந.நரேஷ்குமார் B.Sc.,LL.B., மாவட்ட தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் திருவண்ணாமலை (வடக்கு)
எவரெஸ்ட் ந.நவீன்குமார் B.A.B.L., அரசு வழக்கறிஞர், நோட்டரி பப்ளிக்

மற்றும் குடும்பத்தினர் போளூர் – திருவண்ணாமலை மாவட்டம்.


## தி.மு.க. தொண்டர் அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. தொண்டர் அணிச் செயலாளர் பெ.சேகர் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி – மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொண்டர் அணியின் விழுப்புரம் தெற்கு, திருப்பூர் கிழக்கு ஆகிய மாவட்ட மற்றும் கும்பகோணம் மாநகரஅமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**விழுப்புரம் தெற்கு மாவட்டம்**

தலைவர் — கே.எஸ். ஆசைத்தம்பி 24, பிள்ளையார் கோவில் தெரு, அடூர்கொளப்பாக்கம், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணைத் தலைவர் — அ. பார்த்தசாரதி 1/117, தொட்டி குடிசை மெயின் ரோடு, தி.எடையார் மற்றும் அஞ்சல், திருவெண்ணெய் நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

அமைப்பாளர் — ஜெ. அருள்மொழி 1/3, திரௌபதி அம்மன் கோவில் தெரு, கொட்டியாம்பூண்டி, விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் — 1) பா. கர்ணா, பிள்ளையார் கோவில் தெரு, குடமுருட்டி, தபவனம் அஞ்சல், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 2) மு. வெங்கட் 162, நேதாஜி தெரு, என்.ஜி.ஜி.ஓ. நகர், திருக்கோவிலூர், விழுப்புரம் மாவட்டம். 3) சு. ராமகிருஷ்ணன் மாரியம்மன் கோவில் தெரு, வாக்கூர் மற்றும் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். 4) தி. முருகன் மாரியம்மன் கோவில் தெரு, அடங்குணம், அன்னியூர் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். 5) ந. யோகேஷ் கங்கை அம்மன் கோவில் தெரு, வசுமதி நகர், அயினம்பாளையம், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

**திருப்பூர் கிழக்கு மாவட்டம்**

தலைவர் — எஸ்.வி.எஸ். சாகுல் அமீது 81, அனுமந்தாபுரம் அஞ்சல், தாராபுரம் - 638656, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் — எஸ். வெங்கடேஷ்வரன் 42, ஒ.எச். டேங் வீதி, மூலனூர் - 638106, தாராபுரம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் — தென்றல் ரமேஷ் (எ) எஸ். தியாகராஜன் 178, பாவடி வீதி, மேலப்பாளையம் அஞ்சல், சென்னிமலை - 638051, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் — 1) எம். குணசேகரன் 134/2, மேலப்பாளையம் அஞ்சல், சென்னிமலை - 638051, திருப்பூர் மாவட்டம். 2) எம். மதிவாணன். 4/116, வண்ணாபட்டி, கெத்தல்ரேவ் அஞ்சல், தாராபுரம் - 638657, திருப்பூர் மாவட்டம். 3)மு. சேமலையப்பன். 101, கென்னடி வீதி. சென்னிமலை - 638051, திருப்பூர் மாவட்டம். 4) எம். தெண்டபாணி. 46டி, தமிழ் குடியிருப்பு, அம்மன் கோவில் வீதி, வெள்ளக்கோவில் - 638111, திருப்பூர் மாவட்டம். 5) த. பிரதாப் நியூ ஸ்ரீ சக்தி காளியம்மன் நகர், தளவாய்பட்டினம் அஞ்சல், தாராபுரம் தாலுக்கா - 638656, திருப்பூர் மாவட்டம். 6) எஸ். குமார். சாணார்பாளையம் ரோடு, ஜெ. ஜெ. நகர், மூலனூர் அஞ்சல், தாராபுரம் - 638106, திருப்பூர் மாவட்டம். 7) எம். சுஜீத். 1/25, சாவடிபாளையம், சிவன்மலை, காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம்.

**தஞ்சை வடக்கு மாவட்டம்**
**கும்பகோணம் மாநகரம்**

தலைவர் — டி. மணிமாறன் 23, பெருமாண்டி தெற்கு தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணைத் தலைவர் — எஸ். விஜயேந்திரன் 26, எ.ஆர்.ஆர். நகர், கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

அமைப்பாளர் — இரா. செந்தில் 6பி/11ஏ, மேலக் காவேரி கீழத் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் — 1)கே. ஆனந்தபிரபு 60, ஜெ.பி. கீழ வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 2) கே. பாபு (எ) துரைராஜன் 70டி, அழகப்பன் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 3) ஆர். ராஜேஷ்கண்ணன் 28பி, பாணாதுறை புதுத் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 4) க. பாண்டியராஜன். 10/30, சக்கரபாணி வடக்கு வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 5) அ. மணிகண்டன் 27, பெரும்பாண்டி தெற்கு தெரு, மேலக் காவேரி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை 18.
நாள் :20,12.2025.

**மாஸ்டர் பெ. சேகர்**
செயலாளர்
தி.மு.க. தொண்டர் அணி

## புதுக்கோட்டை மாவட்டம்

# மறமடக்கி ஊராட்சியில் சமூக நீதி பள்ளி மாணவியர் விடுதி!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்!



புதுக்கோட்டை, டிச.23-

ஆலங்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மறமடக்கி ஊராட்சியில் சமூக நீதி பள்ளி மாணவியர் விடுதியை பிற்படுத்தப்பட்டோர் அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் திறந்து வைத்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட மறமடக்கி ஊராட்சியில் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள மாணவர் விடுதியை சமூக நீதி பள்ளி மாணவியர் விடுதியாக மாற்றி மறுசீரமைக் கப்பட்டு அதன் திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு தமிழக பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தலைமை வகித்து சமூக நீதி பள்ளி மாணவியர் விடுதியை பள்ளி மாணவியை அழைத்து ரிப்பன் வெட்டி திறந்து வைத்து தலைமை உரையாற்றினார்.

பின்னர் விடுதி மாணவியர்களுக்குத் தேவையான போர்வை, தட்டு, டம்ளர் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை வழங்கி வாழ்த்தினார். முன்னதாக புதுக்கோட்டை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜி. அமீர்பாஷா வரவேற்புரை யாற்றினார்.

இந்த சமூக நீதிப் பள்ளி மாணவிகள் விடுதி 50 மாணவிகள் சேர்க்கையுடன் திறக்கப்பட்டு விடுதியின் உள்புறம் மற்றும் வெளிப்புறச் களில் 5 CCTV கேமரா பொருத்தப்பட்டு பாதுகாப்பான முறையில் அமைக்கப் பட்டுள்ளது. இவ்விழாவில் மறமடக்கி அரசினர் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் எஸ்.தங்கமணி, விடுதி காப்பாளர் எஸ்.ஜான் ஹென்றி வில்லியம் விடுதி காப்பாளர் ஆர்.வாசுகி மற்றும் பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியைகள், ஊர் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவிற்காக அமைக்கப்பட்ட விழா அரங்கத்தில் அமைச்சர் வருகைக்காக காத்திருந்த பள்ளி மாணவிகள், அமைச்சர் விழாவாக இருந்தாலும் புத்தகங்களுடன் வந்து படிப்பில் கவனம் செலுத்தி, விழா தொடங்கும் வரை அரங்கத்தில் படித்துக் கொண்டிருந்த மாணவிகளின் கல்வி ஆர்வத்தை அறிந்த தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் மாணவிகளின் செயலைக்கண்டு வெகுவாக பாராட்டி மகிழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



தமிழகம் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, பர்கூர் தெற்கு ஒன்றியம், கொண்டப்பநாயனப்பள்ளி ஊராட்சியில் ரூ.87.96 இலட்சம் மதிப்பீட்டில் மஸ்திகானூர் இணைப்பு சாலை முதல் மொண்டிகானூர் இணைப்பு சாலை வரை தார்ச் சாலை அமைக்கும் பணிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான தே.மதியழகன் துவக்கி வைத்து இனிப்புகளை வழங்கினார்.